# ★ லலித்தை நோக்கி துப்பாக்கிப் பிரயோகம்


விலை ரூபா 5-00

ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 34 திருவள்ளுவர் ஆ. 2023 ஆவணி 14 இதழ் 201
யாழ்ப்பாணம் ஞாயிற்றுக்கிழமை 30 — 08 — 199[illegible]


(கொழும்பு)

ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணித் தலைவர்களில் ஒருவரான லலித் அத்துலத் முதலி மீது நேற்று நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டில் இருந்து அவர் மயிரிழையில் உயிர் தப்பினார். திரு. லலித் அத்துலத்முதலி (4ம் பக்கம் பார்க்க)

## ஹெலி, விமானமூலம் தேடுதல் நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

மண்டைதீவில் புலிகளால் கைப்பற்றப்பட்ட விசைப்படகினை கண்டுபிடிக்கும் நோக்குடன் யாழ்ப்பாணத்தில் விமானம் மற்றும் ஹெலி கொப்டர்கள்மூலம் படையினர் பெரும் தேடுதல் வேட்டையில் ஈடுபட்டுள்ளதாக பாது (4ம் பக்கம் பார்க்க)

## பெரும் அதிர்ச்சிக்குள் கடற்படை வட்டாரங்கள்

(கொழும்பு)

யாழ் குடாக் கடலில் ரோந்துப் பணிகளில் ஈடுபடுத்தப்பட்டு வந்த விசைப்படகு ஒன்று விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்ட செய்தி வடபகுதி கடற்பகுதி வட்டாரங்களில் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. (4ம் பக்கம் பார்க்க)

## மண்டைதீவில் மின்னல்வேக அதிரடி

# விசைப்படகு ஆயுதங்களுடன் புலிகளால் கைப்பற்றப்பட்டது

## பல படையினர் காயம்

(யாழ்ப்பாணம்)

**மண்டைதீவு கூட்டு இராணுவ - கடற்படை தளத்தில் நேற்று அதிகாலை கடற்புலிகள் நடத்திய அதிரடியில் அங்கு தரித்து நின்ற சிறீலங்கா கடற்படைக்குச் சொந்தமான நவீனரக விசைப்படகு ஒன்றும் கடற் போர்த் தளபாடங்களும் புலிகளால் கைப்பற்றப்பட்டன.**

நேற்று அதிகாலை 1.30 மணியளவில் கடற்புலி வீரர்களின் தாக்குதல் அணி ஒன்று மண்டைதீவு கூட்டு இராணுவ கடற்படைத் தளம்மீது மின்னல்வேக தாக்குதலொன்றை நடத்தியது. இத்தாக்குதலில் கைப்பற்றப்பட்ட விசைப்படகும் ஆயுதங்களும் வெற்றிகரமாக கடற்புலிகளின் தளம் ஒன்றிற்கு கொண்டுவந்து சேர்க்கப்பட்டது

பிரிட்டன் தயாரிப்பான "கொப்பர் வாட்டர்" ஜெற் படகு ஒன்று புலிகளால் கைப்பற்றப்பட்டுள்ளதாக சிறீலங்கா பாதுகாப்பு வட்டாரங்கள் நேற்று ஊர்ஜிதம் செய்தன.

42 அடி நீளமும், 12 அடி அகலமும் கொண்ட இந்த விசைப்படகு ஒரு அடி ஆழம் குறைந்த கடற்பிராந்தியத் (4ம் பக்கம் பார்க்க)

## நள்ளிரவில் ஹெலி தாக்குதல் மக்கள் வெளியேற்றம்

(யாழ்ப்பாணம்)

யாழ். கடற்பகுதியில் நேற்று அதிகாலை 12 மணியளவில் ஹெலிகொப்டரிலிருந்து 50 கலிபர் தாக்குதல்கள நடத்தப்பட்டது.

பாஷையூர், கொழும்புத்துறை, மணியம்தோட்டம், கல்முனை, பூநகரி கடலோரப் பகுதிகளை நோக்கியே ஹெலி கலிபர் தாக்குதல்களை மேற் (4-ம் பக்கம் பார்க்க)

## நீதிமன்ற நிகழ்வுகள் பின்விளைவை ஏற்படுத்தும்

(லண்டன்)

இந்தியாவில் இரண்டு நீதிமன்றங்களின் நிகழ்வுகள் இலங்கையில் பின்விளைவுகளை ஏற்படுத்தலாம் என பி.பி.ஸி. செய்தியாளர் குறிப்பிட்டுள்ளார்.

முதலாவது விடுதலைப்புலிகளை இந்தியாவில் தடைசெய் (4ம் பக்கம் பார்க்க)

## ஊடுருவித் தாக்குவதில் புலிகள் வல்லவர்கள்

(கொழும்பு)

படையினர் எத்தகைய விழிப்பு நிலையிலிருந்தாலும் புலிகள் ஊடுருவித் தாக்குதல் நடத்தும் ஆற்றல் கொண்டுள்ளார்கள் என்று சிறீலங்கா இராணுவ அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

கெரில்லா நடவடிக்கை, திடீர் அதிரடி, கரும்புலித் தாக்குதல் எனப் புலிகளின் போர்நடவடிக்கைகள் அமைந்துள்ள போதிலும் அவர்களுடைய இராணுவ தந்திரோபாயங்களை கண்டுபிடிக்க முடியவில்லை என்றும் அந்த அதிகாரி மேலும் தெரிவித்தார்.

வடக்கு-கிழக்குப் பகுதியில் இராணுவ முகாம்களுக்கு மிக அருகில் அமைக்கப்படும் இராணுவ காவலரண்களில் அதிவிசேட பயிற்சி பெற்ற படையினர்கள் பல நவீனரக ஆயுதங்களுடன் பலத்த பாதுகாப்பிற்கு மத்தியில் தீவிர கண்காணிப்புடன் இருந்த (4ம் பக்கம் பார்க்க)

## பாதிப்புறும் நிலையில் கடலோர ரோந்துப்பணி

(கொழும்பு)

கடற்படையினரின் பிரதான ரோந்து படகு விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்டதை அடுத்து யாழ். குடா கடலில் கடற்படை ரோந்து நடவடிக்கைகள் பாதிக்கப்படலாமென்று தெரியவருகிறது.

யாழ். குடா கடலில் ரோந்துப் பணிகளில் ஈடுபடுத்தப்பட்டிருந்த இந்தப்படகின் இழப்பு கடற்படையினரைப் பொறுத்தவரை பெரும் இழப்பாக இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது

வெளிநாட்டிலிருந்து யாழ். (4-ம் பக்கம் பார்க்க)

## ஐந்து லட்சம் சிறுவர்கள் யுத்தத்தினல் பாதிப்பு

(கொழும்பு)

இலங்கையில் வடக்கு-கிழக்கில் தொடரும் யுத்தம் மற்றும் கலவரங்கள் காரணமாக நாடு முழுவதும் சுமார் 4 லட்சத்து 37 ஆயிரம் சிறுவர்கள் உள, உடல் ரீதியாகப் பாதிப்படைந்துள்ளதாக அரச உயர் மட்டத்தில் கருத்து தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்விடயம் தொடர்பாக அடுத்த மாதம் கொழும்பில் ஆரம்பமாகும் சார்க் சிறுவர்கள் மாநாட்டில் விரிவாக ஆராயப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமைச்சர்கள் மற்றும் நிபுணர்கள் கலந்து கொள்ளும் (4ம் பக்கம் பார்க்க)

## ஜனநாயகம் இலங்கையில் பின்னேக்கி செல்கிறது

(கொழும்பு)

இலங்கையில் ஜனநாயகம் பின்னேக்கிச் செல்கிறதுஎன்று ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணித் தலைவரில் ஒருவரான காமினி திஸநாயகா தெரிவித்துள்ளார்.

பி.பி.ஸி சிங்கள சேவைக்கு வழங்கிய பேட்டி ஒன்றிலேயே அவர் இவ்வாறு கூறினார் (4ம் பக்கம் பார்க்க)

## பெருமாள் தாயகம் திரும்பும் சாத்தியம் இல்லை

(கொழும்பு)

வட-கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் திரு. வரதராஜப்பெருமாள் தற்போதைக்கு இலங்கை திரும்பும் சாத்தியம் இல்லையென்று கொழும்புச் செய்திகள் தெரிவித்துள்ளன.

திரு. வரதராஜப்பெருமாள் பாதுகாப்பின் நிமித்தம் மத்திய பிரதேச மாநிலத்தில் தங்கியுள்ளார் என்பது தெரிந்ததே. (க)

## புலிகள்-வீரப்பன் கோஷ்டி குறித்து இந்தியா ஆராய்வு

(சென்னை)

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்திற்கும் சந்தனமரக் கடத்தல் வீரப்பன் கும்பலுக்கும் இடையில் நெருங்கிய தொடர்புகள் உண்டா என்பது குறித்த சந்தேகம் மாநில மத்திய அரசுகளுக்கு ஏற்பட்டுள்ளதாக செய்திகள் தெரி (4ம் பக்கம் பார்க்க)

## 9 மாவீரர்களுக்கு இரு நாட்கள் அஞ்சலி

(யாழ்ப்பாணம்)

மாதகல் பகுதியில் கடந்த வியாழக்கிழமை எதிர்பாராத விதமாக விடுதலைப்புலிகளுக்கும், இராணுவத்தினருக்கும் ஏற்பட்ட கடும் சமரில் வீரச்சாவைத் தழுவிக்கொண்ட (4ம் பக்கம் பார்க்க)

"ஊருக்கொரு குளம் செய்வோம் பாருக்கே உணவளிப்போம்"

# வரி விளம்பரம்

### தேவை

கோவில் வேலை தெரிந்த பல வேலைகளும் செய்யக் கூடிய வேலையாள் ஒருவர் தேவை உடன்வரவும் துர்க்கா தேவி தேவஸ்தானம், சாவகச்சேரி. (சி-6749)

### PITAWAKKA PLUS

மதுபானத்தால் ஏற்படும் ஈரல் வியாதிகளுக்கும் வேறு மருந்துகளால் உடலில் ஏற்படும் நச்சுத்தன்மைகளுக்குமாக 9 வகை மூலிகைகள் அடங்கியது. கிடைக்குமிடம்: எஸ் ரி மெடிக்கல்ஸ், ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (சி-6678)

### ஞானதீபம் சஞ்சிகை

01-09-92 இல் வியாழ மாற்றம் 12 இராசிகளுக்கும் பலன்கள். பிரம்மஞானி கந்தையா சுவாமிகள் (குடைச்சாமி) வரலாறு. பகவான் சத்திய சாயிபாபா திருஅவதாரமும் அற்புதங்களும் மூவர்ண முகப்பு கவர். ஆசிரியர் ஞானகுரு. எங்கும் விற்பனையாகின்றது. சி-6754

### A/L பௌதிகவியல் வகுப்பு

பிரத்தியேக தனிப்பட்ட முறையில் பௌதிகவியல் தூயகணிதம், பிரயோக கணிதம் ஏராளமான பயிற்சிகளோடு வினாத்தாள்கள் உட்பட குறுகிய காலத்தில் பாடத்திட்டம் முழுதும் சிறப்பாக முடித்துக்கொடுக்கப்படும். பல ஆண்டுகள் அனுபவம் பெற்ற ஆசிரியர் R. பாலசுப்பிரமணியம் B. Sc. (Cey.) Dip. in Ed., 17/1, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம். (சி 6753

### வைத்திய சேவை

முகப் பருக்களா? தலைமுடி வளரவில்லையா? இளமையில் தலைமயிர் நரையா? வாத ரோகங்களா? சதை வளர்ச்சி, கழலைக்கட்டிகளா? வெண்குஷ்டம், தேமல் போன்ற சர்ம ரோகங்களா? மற்றும் மாதவிலக்குக் கோளாறு, செய்வினை, பிணிதோஷம், சூனியம் போன்றவற்றால் ஏற்பட்ட வியாதிகளுக்கும் மெஞ்ஞான ஆலோசனையுடன் நுண்ணியல் மருத்துவம். சந்திக்கும் நேரம்:- காலை 8-00 மணி பிற்பகல் 1-00 மணி வரை. வேளாங்கண்ணி வைத்திய சாலை, டாக்டர் எம். கருணாதரன், 616, மானிப்பாய் வீதி, ஒட்டுமடம், யாழ்ப்பாணம். (சி-6745)

### ஏலவிற்பனை

கிளிநொச்சியில் அமைந்துள்ள யாழ் / பல்கலைக் கழக விவசாயபீடம் உற்பத்தி செய்த செத்தல்மிளகாய் 09-09-92 அன்று காலை 10-00 மணிக்கு கிளிநொச்சி விவசாயபீடத்தில் வைத்து பகிரங்க ஏலத்தில் விற்கப்படும். வெற்றி பெறுபவர்கள் அதற்கான பணத்தைச் செலுத்தி அவற்றை உடனடியாக அப்புறப்படுத்தவேண்டும். பார்வையிட விரும்புபவர்கள் கிளிநொச்சி விவசாய பீடத்தில் பீடாதிபதியுடன் தொடர்பு கொண்டு பார்வையிடலாம்.

பதிவாளர்
யாழ்/பல்கலைக் கழகம்.
(ஏ-2398)

### பிரேமதாசாவுக்கு வெள்ளி மகாதெசை

ஜனாதிபதி தேர்தல்வழக்குத் தீர்ப்பும் பாதிக்காது, வெள்ளி மகாதெசை பிரேமதாசாவை ஆயுட்கால ஜனாதிபதியாகத் தக்கவைக்கும் (11-9-92) முதல் அட்டமத்து வியாழனும், 05-3-93) முதல் ஏழைரைச்சனி நடுச்கூறும் சேர்வதால் அரசியல் நெருக்கடிகளால் மாரகத்தையுண்டாக்கும், வியாழ மாற்றம் விற்பனையாகின்றது. Prof. சத்தியதாசன் பத்துவீடுத் திட்டம், கட்டுடை. சி 6751)

## பரீட்சை பெறுபேறு

(யாழ்ப்பாணம்)

இம்முறை வெளியான க. பொ. த. (உயர்தரப்) பரீட்சையில் சுண்டுக்குழி மகளிர் கல்லூரி மாணவி தாரகா டானியல் வர்த்தகப் பிரிவில் '4-ஏ' எடுத்துள்ளார்.

கடந்த பல வருடங்களின் பின் இப்பாடசாலையில் வர்த்தகப் பிரிவில் இம்மாணவி '4-ஏ' பெற்றதும் குறிப்பிடத்தக்கது. (சி

## திருடன் பிடிபட்டான்

(யாழ்ப்பாணம்)

திருட்டு முயற்சியில் ஈடுபட்ட வாலிபர் பொது மக்களால் மடக்கிப்பிடிக்கப்பட்ட சம்பவம் ஒன்று நீர்வேலி மாசிவன் பகுதியில் அண்மையில் இடம்பெற்றுள்ளது.

நள்ளிரவுவேளையில் வீட்டிற்குள் நுழைய முற்பட்ட மேற்படி வாலிபரை வீட்டுக்காரர் அயலவரின் உதவியுடன் மடக்கிப்பிடித்து கோப்பாய் தமிழ் ஈழ காவல் பணிமனையினரிடம்ஒப்படைத்துள்ளார். (க)

# தமிழீழ காவல் துறையினர் நன்றி கூறுகின்றனர்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் திருவிழாக் காலங்களில் தமிழீழ காவல்துறையினருடன் இணைந்து பாதுகாப்பு வீதி ஒழுங்குகள் என்பவற்றில் இரவு பகலாக பணிபுரிந்த நிறுவனங்களுக்கு தமிழீழ காவல் துறைப் பொறுப்பாளர் பா. நடேசன் நன்றி தெரிவிக்கின்றார்.

முதன் முதலாக தமிழீழ காவல் துறையினர் ஒரு டணிமனையை ஏற்படுத்தி சட்டம் ஒழுங்குகளை கடைப்பிடித்து பல லட்சம் அடியார்களுக்கு பணி செய்யும் வாய்ப்பினைப் பெற்றுள்ளார் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

சென்யோன் அம்புலன்ஸ் படையினர், சாரணர்கள், யாழ்.மாநகரசபை ஊழியர்கள் மற்றும் தொண்டர் ஸ்தாபனங்களே காவல்துறையினருடன் இணைந்து பணியாற்றினார்கள் என்பது குறிப்பிடத்தக்கது (சு)

## சந்திப்பு

(யாழ்ப்பாணம்)

புதிதாகப் பட்டதாரிப் பயிலுநர் ஆசிரியர்களாக யாழ் மாவட்டத்திலும், குறிப்பாக வெளிமாவட்டத்திலும் நியமனம் பெற்றுள்ள சகலரையும் தமிழீழக் கல்வி மேம்பாட்டுப்பேரவையினர் இன்று ஞாயிறு காலை 10-00 மணிக்கு யாழ் கல்வித் திணைக்கள வளாகத்திலுள்ள நல்லூர் சாதனா பாடசாலையில் சந்திக்கவுள்ளனர் ஆசிரியர்கள் அனைவரையும் தவறாது சமுகம் தரும்படி பேரவை வேண்டுகோள் விடுத்துள்ளது.

## இன்று கிளைகள் திறக்கப்படும்

(உடுவில்)

இன்று ஞாயிற்றுக்கிழமை முதல் பிரதி ஞாயிற்றுக்கிழமைதோறும் குறிப்பிட்ட சில கிளைக்கடைகள் திறந்து வியாபாரம் நடாத்த சுன்னாகம் ப. நோ. கூ. சங்க நிர்வாகம் முடிவுசெய்துள்ளது

ஞாயிற்று கிழமைகளில் சாய்ப்பு சட்டம்அமுல்செய்யப் படுவதால் பொதுமக்கள் அத்தியாவசிய பொருட்களைப் பெற்றுக்கொள்ள வசதியாக இக்கிளைகளைத் திறந்து வைத்திருக்க முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

சுன்னாகம் ப. நோ. கூ. சங்க எல்லைப்பரப்பில் அமைந்துள்ள ஒவ்வொரு கிராம மக்களின் வசதிக்காகவும் ஒவ்வொரு கிராமத்திலும ஒரு கிளைக்கடை ஞாயிற்றுக்கிழமைகளில் திறந்திருக்கும். (109)

## இன்று

(உடுவில்)

கந்தரோடை வரிருக்கை விசாலாட்சி அம்மன் கோவில் வருடாந்த சங்காபிஷேகம் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை நடைபெறும். (109)

★

(உடுவில்)

சங்குவேலி ஸ்ரீ அம்பாள் சனசமூக நிலைய இரண்டாவது ஆண்டு விழாவும் விளையாட்டுப் போட்டியும் இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் ஒன்றரை மணிக்கு திரு. அரு மோகன் தலைமையில் நடைபெறும். அத்துடன் சனசமூக நிலையங்களின் சமாசத்தின் ஆதரவில் இப்பகுதியிலிலுள்ள இருபத்தைந்து குடும்பங்களுக்கு இலவச பதிவுத் திருமணமும் இடம்பெறும். (409)

★

(யாழ்ப்பாணம்)

இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் யாழ். மாவட்டத்தில் உள்ள 14 கிளைகளிலும் அதன் வருடாந்தப் பொதுக் கூட்டங்களையும் தேர்தல்களையும் இன்று ஞாயிற்றுக்கிழமை நடாத்தவுள்ளது.

அங்கத்தவர்கள் அனைவரையும் தவறாது தத்தம் பிரிவுக் கூட்டங்களுக்கு சமுகமளிக்குமாறு இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் யாழ். தலைமைக்கிளை கேட்டுக்கொள்ளுகிறது. (இ-வி)

★

## தடகள விளையாட்டு விழா

(யாழ்ப்பாணம்)

தியாகி திலீபன் நினைவுக் கேடயத்திற்கான தடகள விளையாட்டுவிழா திட்டமிட்டபடி நடைபெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது. இன்று 30-ம் திகதி ஆண்கள், பெண்களுக்கான மரதன் ஓட்டப் போட்டி காலை 6 மணிக்கு யாழ். மத்திய கல்லூரி மைதானத்திலிருந்து ஆரம்பமாகும். ஆண்கள், பெண்களுக்கான சைக்கிளோட்டப் போட்டி நாளை 31-ம் திகதி காலை 6 மணிக்கு கோண்டாவில் மாவட்ட செயலக முன்றலிலிருந்து ஆரம்பமாகும்.

போட்டிகளுக்காக விண்ணப்பித்த போட்டியாளர்கள் குறித்த நேரத்திற்கு முன்னர் போட்டி ஆரம்பமாகும் இடத்திற்குச் சமுகமளிக்கும்படி கேட்கப்படுகின்றனர்.

★

## இன்று இலங்கை வங்கி மகளிர் பொற்கணக்கு


(யாழ்ப்பாணம்)

இலங்கை வங்கி தனது 53-ம் ஆண்டு பூர்த்தியினை முன்னிட்டு மகிழ்வுடன் அறிமுகம் செய்யும் மகளிர்களுக்கான விசேட சிக்கனத்திட்டம், 'மகளிர் பொற்கணக்கு' எனப் பெயர் பெற்று 1993ம் ஆண்டு மார்ச் மாதம் 08-ந் திகதியான சர்வதேச மகளிர் தினத்தன்று விசேட சீட்டிழுப்பின் மூலம் நிறைவு பெறவுள்ளது.

இதன் அறிமுக விழாவினை யாழ்ப்பாணம், இலங்கை வங்கி, மேற்தரக்கிளை இன்று

[3ம் பக்கம் பார்க்க]

# 31-ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



ஆமரர்
சின்னத்தம்பி ஆசைப்பிள்ளை

| மண்ணில்: | விண்ணில்: |
|---|---|
| 1909-06-07 | 1992-07-31 |

இன்று (1992-08-30) நாவலடி ஒழுங்கை திருநெல்வேலியில் இடம்பெறும் வீட்டுக்கிருத்திய வைபவத்தில் கலந்து கொள்வதுடன் அன்னாரது ஆத்மா சாந்திக்காகவும் பிரார்த்தித்து அன்று நடைபெறும் மதியபோசனத்தில் கலந்து கொள்ளுமாறு அன்பர்கள், நண்பர்கள், சுற்றத்தவர் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

குடும்பத்தினர்

'கஜன் குறுப்', 48, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம். (சி-6744)

## யாழ்ப்பாண பல்கலைக்கழக பொதுப் பட்டமளிப்புவிழா 1992

செப்டம்பர் 5 ஆம் திகதி நடைபெறவிருக்கும் யாழ் பல்கலைக்கழக பொதுப் பட்டமளிப்பு விழாவிற் பங்குபற்றும் மாணவர்களுக்கான அங்கிகள் 2-9-92 – 4-9-92 வரை மு. ப. 9. 30 மணி முதல் பி. ப. 3-00 மணி வரை கல்விக்கிளையில் வழங்கப்படும். நிழற்படத்திற்கான கட்டணமாக ரூபா 25/- ஐ சிறப்பர் அலுவலகத்துற் செலுத்தியமைக்கான பற்றுச் சீட்டினை மாணவர்கள் கொடுத்துத் தமது அங்கிகளைப் பெற்றுக்கொள்ளவும் அங்கியை பெறவரும் பொழுது மாணவ அடையாள அட்டையைக் கொண்டு வருதல் வேண்டும்.

பதிவாளர்
[ஏ-2397]

## யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்

பின்வரும் பதவிக்குப் பொருத்தமான விண்ணப்பதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள 1992-09-25ஆம் திகதி வரை என்னால் பெற்றுக் கொள்ளப்படும்.

### தற்காலிக போதனாசிரியர் (கணனிப் பகுதி)

**சம்பள அளவுத்திட்டம்:**

தற்காலிக போதனாசிரியா (கணனிப் பகுதி)- ரூபா 3 250/-(நிலையானது) மாதமொன்றிற்கு

(பரீட்சை பெறுபேறுகளுக்காகக் காத்திருப்போருக்கு அவர்களின் பெறுபேறுகள் வெளியிடப்படும் வரை 3 000/- நிலையானது) மாதச் சம்பளத்தில் வைக்கப்படுவர்.)

**தகைமைகள்:**

பட்டதாரி அல்லது பட்ட இறுதித் தேர்வுக்குத் தோற்றி பெறுபேறுகளுக்காகக் காத்திருப்பவர்.

இப்பல்கலைக் கழகத்தின் தாபனக்கிளையின் சிரேஷ்ட உதவிப் பதிவாளரின் அலுவலகத்தில் கிடைக்கக் கூடிய படிவங்களில் விண்ணப்பங்கள் செய்யப்படல் வேண்டும்.

தபால் மூலம் படிவங்களைப்பெற விரும்புவோர் சுயமுகவரியிட்டு முத்திரை ஒட்டப்பட்ட 23X10 ச. மீ. அளவுடைய கடித உறையை அனுப்புதல் வேண்டும் விதிக்கப்பெற்ற படிவங்களில் அனுப்பப்படும் விண்ணப்பங்கள் மாத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும்.

அரசாங்கத் திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள், நியதிச் சட்ட சபைகளிலுள்ள விண்ணப்பதாரிகள் தமது நிறுவனங்களின் தலைவர்களின் மூலம் விண்ணப்பித்தல் வேண்டும்.

பதிவாளர்

யாழ்ப்பாணப்
பல்கலைக் கழகம்,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.
1992-08-27 (எ-2396)

## இனப்பிரச்னைக்கு தீர்வு இன்றேல் நாடு சூன்யமாகிவிடும் - ஹமீத்

(கொழும்பு)

இனப் பிரச்னைக்கு அரசியல் தீர்வு இன்றேல் நாடு சூன்ய மாகிவிடுமென அமைச்சர் ஏ. சி. எஸ். ஹமீத் எச்சரித் துள்ளார்.

இனப்பிரச்னைக்கு தேசிய இணக்கத்தின்மூலம் பொருத்த மான தீர்வொன்று விரைந்து காணப்படவேண்டும். இன்றேல் இலங்கையின் எதிர் காலம் சூன்யமாகவே இருக் கும்.

இன்றுள்ள நிலைமையைத் தொடர்ந்தும் சகித்துக்கொண் டிருக்க மக்கள் தயாராக இல்லை. அத்தகையவர்களுக்கு இந்த அரசாங்கத்தில் இடமி ருக்காது என்றும் அமைச்சர் கூறினார். (சி)

## தி. மு.க. செயலர் உட்பட 10 ஆயிரம் தொண்டர்கைது

(சென்னை)

தி மு. க. தலைமைச்செய லர் ஆர்க்காடு வீராசாமி உட் பட தி. மு. க. மற்றும் நேசக் கட்சிகளைச் சேர்ந்த 10 ஆயி ரத்திற்கும்மேற்பட்ட தொண் டர்களை அ. தி. மு. க. தலை மையிலான தமிழக அரசு கைதுசெய்திருப்பதாக தி. மு. க. தலைவர் மு. கருணாநிதி குற்றம்சாட்டியுள்ளார்.

சென்னையில் பத்திரிகையா ளர் மத்தியில் நேற்று உரை யாற்றுகையில் அவர் இதனைத் தெரிவித்தார்.

இதற்கிடையில் ஸ்ரீராமச் சந்திரா மருத்துவமனையை அரசு பொறுப்பேற்கும் விவ காரம் தொடர்பாக தேசிய முன்னணி மற்றும் இடது சாரிக்கட்சிகள் அடுத்தமாதம் 1-ந் திகதி மறியல்போராட் டம் நடத்தவுள்ளதாகவும் இதுசம்பந்தமான முக்கிய கூட்டம் நேற்று முன்தினம் சென்னையில் நடைபெற்ற தாகவும் செய்திகள் தெரிவிக் கின்றன. (இ-க)

## ★ இந்தியாவிலிருந்து தமிழகத்தை பிரிக்க முயற்சி? பொட்டுஅம்மான் மீதுவழக்கு

(சென்னை)

இந்தியாவில் இருந்து தமிழ் நாட்டை பிரிப்பதற்காக 'தமிழ் தேசிய மீட்புப் படையை' நிறுவியதாக குற் றம் சாட்டி விடுதலைப்புலி களின் உளவுப்படைப்பிரிவு தலைவர் திரு பொட்டு அம் மான் மற்றும் 31 பேர் மீது தமிழ்நாடு விசேட விசார ணைப் பிரிவு குற்றப்பத்திரம் தாக்கல் செய்துள்ளது.

64 பக்கங்கள் கொண்ட இக்குற்றப்பத்திரத்தில் 320 சாட்சியங்கள் பதிவு செய்யப் பட்டுள்ளது.

இக்குற்றச் சாட்டின் படி தமிழக அரசைப் பயமுறுத்தி தமிழ் நாட்டைப்பிரித்து எடுக் கும் நோக்குடன் மேற்படி படைதிரட்டப்பட்டதாக குற் றம் சாட்டப்பட்டுள்ளது,

இவ்வழக்கில் குற்றம் சாட் டப்பட்டுள்ள பொட்டு அம் மான் ஏற்கனவே ராஜீவ் கொலை, பத்மநாபா கொலை வழக்கிலும் முக்கிய சந்தேக நபராக குற்றம் சாட்டப்பட் டுள்ளதும் குறிப்பிடத்தக்கது.

மேற்படி தமிழ் தேசிய மீட் புப் படையின் தலைவர் என கூறப்படும் வை. ரவிச்சந்திர னும் [வை.கோபால்சாமியின் சகோதரர்] இவ்வழக்கில் குற் றம் சாட்டப்பட்டுள்ளார். [க-சி]

## இராசி பலன்

30-08-1992

ஞாயிற்றுக்கிழமை

(தமிழுக்கு ஆவணி 14)

திருதியை பி. இ. 2 27 வரை உத்தரம் மு. ப. 8-52 வரை, இராகுகாலம் மாலை 4-35 முதல் 6 - 05 வரை, அமிர்தயோகப் சுபநேரம் காலை 9 05 முதல் 10-35வரை

மேடம்: மக்கள் ஆதரவு, பொருள்வரவு, காரியசித்தி

இடபம்: பிரிந்து வாழ்தல், நாணயப்பழுது, அவதி.

மிதுனம்: புத்திர சோகம், அமைதிக்குறைவு, அலைச்சல்.

கடகம்: காரியஜயம், அதிக பிரயாசம், தலைமைத்துவம்.

சிங்கம்; விதண்டாவாதம், மனக்குறை, பணமுடை.

கன்னி: வாக்குவன்மை, அதிகாரபலம், பயணம்.

துலாம்: நலக்குறைவு, குடும்பபகை, தொழில்நஷ் டம்.

விருச்சிகம்: குடும்பஒற்றுமை விருந்தினர்வருகை, தானதர் மம்.

தனுசு: சாமர்த்தியம், வாழ்க்கைச்சுகம், தியாகம்.

மகரம்: குறிக்கோள் தவறு தல், மனப்போராட்டம் பகை வர் துன்பம்.

கும்பம்: ஏமாற்றம், தொழில்மிகை, மனச்சஞ்சலம்

மீனம்! இனசனவருகை, சுபகாரியம் அறிஞர்சந்திப்பு.

— ஜோஸ்யர்

## நாளை திங்கள் முதல் தமிழ் அகதிகள் திருப்பி அனுப்பப்படுவர்

(சென்னை)

தமிழகத்தில் தங்கியுள்ள இலங்கை தமிழ் அகதிகளை இலங்கைக்கு திருப்பி அனுப் பும் நடவடிக்கை நாளை திங்கட்கிழமை ஆரம்பமாக வுள்ளதாக தமிழக அரசின் புனர்வாழ்வு செயலர் ரி.பாஸ் கரதாஸ் தெரிவித்துள்ளார்.

இலங்கை தமிழ் அகதிகளை தாயகத்திற்கு திருப்பி அனுப் பக் கூடாது என்ற தனது ஒரு வாரகால இடைக்கால தடை யுத்தரவை சென்னை உயர்நீதி மன்றம் ரத்து செய்ததைத் தொடர்ந்தே தமிழ் அகதிகளை இலங்கைக்கு அனுப்பும் நட வடிக்கை ஆரம்பிக்கவுள்ள தாக கூறப்படுகிறது.

இதற்காக தெரிவு செய் யப்பட்ட முதற்தொகுதி அகதிகள் நாளை திங்கட் கிழமை விமானம் மூலம் அனுப்பி வைக்கப்படுவார்கள் எனவும் தெரிவிக்கசப்படுகிறது. (க - சி)

## மட்டுநகரில் சுற்றிவளைப்பு 26 தமிழர் கைது

(மட்டக்களப்பு)

மட்டக்களப்புக்குத் தெற் கில் சிறிலங்கா இராணுவம் மேற்கொண்ட சுற்றிவளைப் பின்போது 26 பொதுமக்கள் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டனர் எனத் தெரியவருகிறது.

இவர்கள் பற்றிய விசாரணை நடைபெறுகிறதென சிறி லங்கா இராணுவம் கூறியுள் ளது.

அண்மைக்காலமாக இப் பகுதியில் திடீர் சுற்றிவளைப்பு கள் மேற்கொள்ளப்பட்டு பொதுமக்கள் பலர் கைது செய்யப்பட்டு வருவதும் குறிப் பிடத்தக்கது. [சு-சி]

# 'தமிழீழம் எங்கும் புலிகளால் 20,000 படையினர் முடக்கம்'

## - இளம்பரிதி

(நெல்லியடி)

''இன்று நினைவு கூரும் மாவீரர்களின் வரலாறு ஒரு மாபெரும் வரலாறாகும். இம் மாவீரர்கள் தமிழ் மக்களுக்கு வழிகாட்டிகளாகத் திகழ்ந்த வர்கள் இந்திய இராணுவம் எமது தமிழ் மண்ணை ஆக்கிர மித்து எமது போராட்டத்தை நசுக்கியவேளை, எமது சுதந் திரத்தைப் பெறத் தியாகம் பல புரிந்தனர். உறுதியான தன்மையால் இந்திய இராணு வம் தமிழ் மண்ணை விட்டு வெளியேறியது.''

இவ்வாறு துன்னாலை மேற் கில் நடைபெற்ற, வடமராட் சிக் கோட்டத்தின் அச்சுவே லியை உள்ளடக்கிய கரவெட்டி வட்டத்தில் இதுவரை கால மும் யூலை, ஆகஸ்ட் மாதங் களில் வீரச் சாவைத் தழுவிய மாவீரர்கள் நினைவு நாள் அஞ் சலி உரையில் யாழ் மாவட்ட அரசியல் நிர்வாகப் பொறுப் பாளர் திரு. இளம்பரிதி கூறி னார்.

அவர் தொடர்ந்து பேசுகை யில்: ''எமது போராட்டம் உறுதி, தியாகம் கொண்டது. இதனால் எமது போராட்டம் தோல்வி அடையப்போவ தில்லை. எமது தமிழினம் வாழ் ந்துவருவது கடல் சூழ்ந்த பிரதேசமாகும். இதன் மூலம் தான் நாம் எமது விடுதலையை வளர்க்கின்றோம். சிறிலங்கா அரசு கடல் ரீதியாகப் படை களைப் பெருக்கி, எமது விடு தலைப் போராட்டத்தை நசுக்க, கடற்படையைப் பலப்படுத்தி எமது நடவடிக் கைகளை முடக்க முனைகிறது. இதற்கு நாமும் எதிர் நட வடிக்கைகளை எடுத்து வருகின் றோம். இதனால் சிறிலங்கா கடற்படை சிதறி ஓடுகிறது.

''தமிழருடைய போராட் டத்தில் இராணுவத் தீர்வு காணமுடியாதென்று இராணு வத் தளபதிகளே கூறுகின்ற னர். படைகளுக்கு ஆணை பிறப்பிக்கும் தளபதிகளின் கருத்துப்படி ஒன்றுமே செய்ய முடியவில்லை. 20 ஆயிரம் படையினர் முடக்கப்பட்டுள்ள னர். 4 ஆயிரம் ஆயுதங்கள் எமது போராளிகளால் கைப் பற்றப்பட்டுள்ளன. சர்வதேச ரீதியாக, நாம் யுத்தப் பிரி யர்கள் என்று சிறிலங்கா அரசு நினைக்கின்றது. சில மாதங்களுக்கு முன் தென் இலங்கையிலிருந்து நமது தமிழ் மண்ணுக்கு வந்து சென்ற பௌத்த மத குரு மார்களகூடத் தமிழருடைய போராட்டம் நியாயமானது என்பதை உணர்ந்துள்ளனர். நாம் பேச்சுவார்த்தைக்குத் தயாராக இருந்தோம். இத னைச் சர்வதேச மக்களுக்கும் தெளிவுபடுத்தினோம். சிறி லங்கா அரசு அதனைத் தூக்கி எறிந்துவிட்டது. நாம சரி யான முறையில் எமது நட வடிக்கையை அமைத்துள் ளோம். இதனால் இந்தியாவில் உள்ள வெகுஜன இயக்கங்கள் எமது பக்கம் திசை திரும்பு கின்றன.

''கடந்த 2 வருடப் போரில் சிங்கள மக்களுக்கு மனச் சலிப்பு ஏற்பட்டிருக்கிறது யுத்தம் மூலம் தமிழர் பிரச் னைக்குத் தீர்வுகாணமுடியாது என்பதை அவர்கள் உணரத் தொடங்கியுள்ளனர். தாம் வெற்றியடையமுடியாது என் பதையும், விடுதலைப் புலிகள் பலமாக இருக்கிறார்கள் என் பதையும் புரிந்துகொள்கின்ற னர். முதலாம் கட்ட, இரண் டாம் கட்ட இராணுவ நட வடிக்கையில், 1,000 விடுதலைப் புலிகளை முடக்க, பேரினவாத அரசும், எதிரிப் படையும் நினைத்தது. ஆனால் எமது போராளிகள் எதிரிகளுக்குப் பெரும் இழப்பை ஏற்படுத்தி னர்.

''எதிரியானவன் எத்த னையோ டாங்கிகளுடனும், விமானப்படை உதவியுடனும் வந்தாலும், எமது போராளி கள் போர்க்களத்தில் தமது உடலை மட்டுமே டாங்கி களாகப் பாவிக்கின்றார்கள். இதனால் எதிரிக்குப் பெரும் சேதம் ஏற்படுகின்றது. சட் டைக்காடுச் சண்டையின் போது எம்மால் 4 டாங்கிகள் உடைக்கப்பட்டு அழிக்கப்பட் டன சரியான தெளிவோடு போர்க்களத்தில் நிற்கும் போராளி, நமக்கென்று ஒரு தாயகம் இருந்தாலதான் நாம் சுதந்திரமாக வாழமுடியு மென்ற கொள்கையுடன் போராடுகின்றான். இவ்வேளை யில் மூன்றாம் கட்ட இராணுவ நடவடிக்கையைமேற்கொள்ள எதிரி தயாராகின்றான்.

''நாம் எந்நேரமும் விழிப் புடன் இருப்பவர்கள். எமது வேவு பார்க்கும் பிரிவினர் அராலிக்குள் புகுந்து, 9 இரா ணுவ உயரதிகாரிகளையும் இராணுவச் சிப்பாய் ஒருவரை யும் அழித்துள்ளமை, தமிழீ ழப் போராட்ட வரலாற்றில் மிகப் பெரிய சாதனையாகும்'' என்றும் குறிப்பிட்டார். (160)

## இன்று

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

பிற்பகல் 4-30 மணியளவில் நல்லூர் முருகன் ஆலய முன்றலில் அமைக்கப் பெற்ற விசேட கருமபீடத்தில் நடாத் தவுள்ளனர்.

இவ்விழாவினைச் சிறப்பிக் கும் முகமாக மாலை 6-00 மணியளவில் பொன். சுந்தர லிங்கத்தின் இன்னிசைக் கச் சேரி இடம்பெறவிருக்கிறது. (சி)

## ப. நோ. கூ. சங்கம் இடமாற்றம்

(மானிப்பாய்)

பண்டத்தரிப்பு ப. நோ. கூ. சங்கம் தற்போது சங் கானைக்கு இடமாற்றம் செய் யப்பட்டுள்ளது.

26-ம் திகதி முதல் இடமாற் றம் செய்யப்பட்ட இதன் நான்கு கிளைகள் சங்கானைச் சந்தைக்கு அருகாமையிலும், மற்றுமோர் கிளை மானிப் பாய் தபாலகத்திற்கு அரு காமையிலும் திறந்து வைக் கப்பட்டுள்ளன. [71]

## கிரிக்கெட் ஆஸி. 177-5

(கொழும்பு)

இலங்கைக்கும் அவுஸ்திரே லியாவுக்குமிடையில் நேற்று முன்தினம் கொழும்பு கேத் தாராம விளையாட்டரங்கில் 2-வது கிரிக்கெட் டெஸ்ட் ஆரம்பமானது.

முதலில் துடுப்பெடுத்து ஆடும் அவுஸ்திரேலியா முதல் நாள் ஆட்டம் முடிவடையும் போது 5 விக்கெட்டுகள் நஷ் டத்துக்கு 177 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. ஆரம்ப ஆட் டக்காரரானடீன்ஜோன் ஆட் டமிழக்காமல்77ஓட்டங்களைப் பெற்றார். டுலிப் லியனகே 61 ஓட்டங்களைக்கொடுத்து 3விக்கெட்டுகளை வீழ்த்தினர்.

கடுமையான மழை காரண மாக மேற்படி ஆட்டம் இடை நடுவில் ஒருமணித்தியாலம் தடைப்பட்டது. (வி)

## ★ லண்டனில் கிரிக்கெட் போட்டி யாழ். மத்திய கல்லூரியின் பழைய மாணவர் சாம்பியன்

(லண்டன்)

இலங்கைக் கல்லூரிகளின் பழைய மாணவர்களிடையே இங்கிலாந்தில் நடைபெற்ற மட்டுப்படுத்தப்பட்ட ஓவர் களை கொண்ட கிரிக்கெட் போட்டியில் யாழ். மத்திய கல்லூரி, கொழும்பு றோயல் கல்லூரியை தோற்கடித்து சாமபியன் கிண்ணத்தை சுவீகரித்துக் கொண்டது.

இறுதிப் போட்டி லண்டன் சுறே வோஸ்ற்றர் மைதான னத்தில் நடைபெற்றபோது, 6 ஆயிரத்திற்கும் மேற்பட்ட இலங்கையர் போட்டியைக் கண்டு களித்தனர்.

யாழ்.மத்திய கல்லூரி அணி அரையிறுதிப் போட்டியில் கண்டி ரிறிற்னி கல்லூரியை வென்று இறுதிப்போட்டியில் றோயல் கல்லூரியை வென் றது

இச்சுற்றுப் போட்டியில் நாலாந்தா, மகிந்தா, றோயல், சென். தோமஸ், சென். ஜோசப்ஸ், சென்.பீற்றர்ஸ், கண்டி ரிறிற்னி, யாழ்.சென். ஜோன்ஸ், ஸாஹிரா, ஆனந்தா, சென். அன்ரனிஸ், யாழ்.மத்திய கல்லூரி பழைய மாணவர் அணிகள் பங்கு பற் றின.

றோயல் அணிக்கு ரி. வாகீ ஸன் தலைமை தாங்கினர் யாழ். மத்திய கல்லூரி அணி க்கு கே. தோமஸ் தலைமை தாங்கினர். போட்டியின் சிறந்த ஆட்டக்காரருக்கான விருதை கே தோமஸ் பெற் றுக்கொண்டார்.

தொடர்ந்து மூன்றாவது தடவையாக யாழ். மத்திய கல்லூரி அணி வெற்றிக் கேடயத்தை சுவீகரித்துள்ள தும் குறிப்பிடத்தக்கது. (சி)

# தடுப்பு ஊசி மருந்திற்கு பலத்த தட்டுப்பாடு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட வைத்தியசாலைகளில் ஏற்பு ஊசிமருந்து, விசர் நாய்க்கடித் தடுப்பூசி மருந்துஆகியவற்றிற்குப் பலத்த தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

யாழ். போதனா வைத்தியசாலையில் கடந்த வாரத்திலிருந்து ஏற்புத் தடுப்பூசி மருந்தும், ஏ. ஆர். வி. மருந்து பற்றாக்குறை ஏற்பட்டதையடுத்து பிறஇடங்களிலிருந்து தருவிக்கப்பட்டே நோயாளர்கட்கு ஏற்றப்பட்டுவந்தது.

தற்போது தொடர்ச்சியாகப் போடப்பட்டுவரும் நோயாளர்கட்கு மட்டுமே விசர்நாய்க்கடித் தடுப்பூசி மருந்து ஏற்றப்பட்டுவருகிறது.

நேற்றிலிருந்து ஏற்பூசி மருந்து யாழ். வைத்தியசாலையில் முடிவடைந்துவிட்டது. (56)

## கிரிக்கெட்

### ஆஸி 247

(கொழும்பு)

இலங்கை அணிக்கும் ஆஸ்திரேலிய அணிக்குமிடையிலான 2-வது கிரிக்கெட் டெஸ்ட் போட்டியின் 2-ம் நாளில் ஆஸ்திரேலிய அணி தனது முதலாவது இன்னிங்ஸில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 247 ஓட்டங்களைப் பெற்றது (டீன்ஜோன்ஸ் 77, கிறேக் மத்யூ 55)

மழை காரணமாக ஆட்டம் இடைநடுவில் நிறுத்தப்பட்டது. (சி)

## ஹெலி

(1ம் பக்கத் தொடர்ச்சி)

காட்பு வட்டாரங்கள் தெரிவிக்கன.

நேற்று அதிகாலை தொடக்கம் யாழ். நகர் மற்றும் கடலோரப் பகுதிகளை நோக்கி ஹெலிகொப்டர்கள் தீவிர கண்காணிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டன.

நேற்றுமாலை 4-30 மணியளவில் வை 8 ரக விமானம் ஒன்றும் இந்தக் கண்காணிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டதை அவதானிக்க முடிந்தது.

கல்முனை, மண்டைதீவு, பண்ணை, கொழும்புத்துறை கடற்பகுதிகளிலே தீவிர கண்காணிப்பு இடம்பெற்றது. (56-ரி)

# ஜனாதிபதி பிரேமாவிற்கு எதிராக நம்பிக்கையில்லா பிரேரணை மீண்டும் கொண்டுவரப்படும்

## லலித் அத்துலத்முதலி

(கொழும்பு)

"ஜனாதிபதி பிரேமதாசாவுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை தோல்வியடைந்தாலும் மீண்டும் பல நம்பிக்கையில்லாப் பிரேரணைகள் கொண்டு வரப்படும்."

ஜனாதிபதி பிரேமதாசாவுக்கு எதிராகக் கொண்டுவரப்பட்ட நம்பிக்கையில்லாப் பிரேரணையின் ஒரு வருடப் பூர்த்தி விழாவில் பேசிய திரு. லலித் அத்துலத்முதலி இவ்வாறு குறிப்பிட்டார்.

அதே கூட்டத்தில் பேசிய திரு. காமினி திஸநாயக்கா அதிபர் மீதான போராட்டத்தை மேலும் வலுப்படுத்தப்போவதாகக் கூறினர்.

மேலும் ஜனாதிபதி பிரேமதாவுக்கு எதிராகத் தாங்கள் நடத்தும் 10 லட்சம் பேர்களிடம் பெறும் கையெழுத்துப் போராட்டத்தில் ஜனாதிபதியின் பேரிலான யுகம் மங்கிவருவதாகவும் குறிப்பிட்டுளனர். (கே)

## பாதிப்புறும்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

குடா கடற்பரப்பில் ரோந்துப் பணிகளுக்கென இறக்குமதி செய்யப்பட்ட இப்படகு படையினரை ஏற்றி இறக்குவதற்கும் பயன்படுத்தப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

## ஜனநாயகம்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

உலக நாடுகளில் ஜனநாயகத்தின் மதிப்பு உயர்ந்துவரும் இவ்வேளையில் இலங்கையின் ஜனநாயகம் பின்னோக்கிச் செல்கிறது.

இலங்கையில் தற்போது நடைமுறையிலிருக்கும் ஜனாதிபதி ஆட்சிமுறையை நான் எதிர்க்கிறேன என்றும் அவர் கூறினர். (சு)

## மண்டைதீவு

(1ம் பக்கத் தொடர்ச்சி)

திலும் வேகமாகச் செல்லக் கூடியது. கடற்புலிகளால் கைப்பற்றப்பட்ட நவீனரக நீர் உந்து விசைப்படகில் 250 குதிரை சக்தி கொண்ட இரண்டு வெளி இணைப்பு இயந்திரங்கள் பொருத்தப்பட்டிருந்தது. இந்தப்படகு கடலில் மணித்தியாலத்துக்கு 40மைல் வேகத்தில் செல்லக் கூடியது.

கடற்புலிகளால்கைப்பற்றப்பட்ட இந்த விசைப்படகிலிருந்து மீட்கப்பட்ட ஆயுதங்களின் விபரம் வருமாறு;

50 கலிபர் மேலதிக சுடுகுழல்-1 50 கலிபர் ரவைகள்-1000, விமான எதிர்ப்பு குறிகாட்டி-1, தரை தாக்குதலுக்கான குறிகாட்டி-1, நடுத்தர ரவைகள்-1500, கைக்குண்டுகள்-10, உயிர்காட்பு மிதவை உடைகள்-75. (வி-56-ரி-157)

## ஊடுருவித் தாக்குவதில்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

போதும் புலிகள் இவற்றையெல்லாம் மீறி தாக்குதல் நடத்துகிறார்கள் என்றும் தொடர்ந்து நடைபெறும் போரில் அவர்களை வெல்ல முடியாவிட்டாலும் படையினர் இழப்பை தவிர்க்க வேண்டுமானால் புலிகளின் இராணுவ தந்திரோபாயத்தை கண்டறிய வேண்டும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

## ஐந்து

1ம் பக்கத் தொடர்ச்சி)

மேற்படி சார்க் மாநாட்டை ஜனாதிபதி ஆர். பிரேமதாசா ஆரம்பித்து வைக்கவுள்ளார். [க]

## பெரும்

1ம் பக்கத் தொடர்ச்சி)

படையினரின் முழுக்கட்டுப்பாட்டிலிருக்கும்மண்டைதீவுப் பகுதியில் இருந்து இவ் விசைப்படகு புலிகளால் எப்படிக் கைப்பற்றப்பட்டது என்ற கேள்வியும் கடற்படை மத்தியில் எழுந்துள்ளது.

இது தொடர்பாக விசாரணை ஒன்றும் கடற்படையினர் தரப்பில் மேற்கொள்ளப்படவுள்ளது.

## புலிகள்·வீரப்பன்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

விக்கின்றன.

இந்திய மத்திய அரசும், தமிழக மற்றும் கர்நாடக அரசும் இம்முயற்சியில் தீவிரமாக ஈடுபட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (க)

# துர்நடத்தைகளில் 30,000 சிறுவர்கள்

[கொழும்பு]

இலங்கையில் 30,000சிறுவர்கள் துர்நடத்தையில் ஈடுபட்டுள்ளார்கள் என கொள்கை திட்டமிடல் அமைச்சின் செயலாளர் லோயிட் பெர்னாண்டோ செய்தியாளர் மாநாடு ஒன்றில் குறிப்பிட்டார்.

இவர்கள் இதிலிருந்து மீள்வதற்கு பாடசாலை ரீதியில் சுவரொட்டிகளும், கட்டுரைப் போட்டிகளும் நடாத்துவதோடு சிறுவர்களுக்காக சுகாதார நிலையங்களும் அமைக்கப்படுமெனவும் தெரிவித்தார்.

## நீதிமன்ற

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

யக் கோரி விடுத்தமனுமீதான விசாரணையில் விடுதலைபுலிகள சார்பில் எந்த ஒரு வக்கீலும் ஆஜராகாததால் ஒத்திவைக்கப்பட்டுள்ளது

இரண்டாவது இந்தியாவிலுள்ள இலங்கை அகதிகள் பலவந்தமாக திருப்பி அனுப்பப்படுகிறார்கள் எனக் கூறி அதை தடைசெய்யக் கோரி விடுத்த மனு தள்ளுபடி செய்யப்பட்டமை ஆகியவையாகும். (கே)

## லலித்

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

யும், அவரது மெய்ப்பாதுகாவலர்களும்சென்றபொழுது அவர்களை ஆறு பேரடங்கிய குழு ஒன்று பின்தொடர்ந்தது.

இக்குழுவிலிருந்த ஒருவர் திரு. லலித் அத்துலத் முதலியை நோக்கித் திடீரெனத் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டார்.

துப்பாக்கிக்குண்டுகள் லலித் அத்துலத் முதலியுடன் நின்ற அவரது மெய்ப்பாதுகாவலர்களில் இருவரைத் தாக்கிய துடன் அவர் காயம்மேதுவும் இன்றி உயிர் பிழைத்தார்.

இத்துப்பாக்கிச் சூட்டைத் தொடர்ந்து துப்பாக்கி ஏந்திய நபரும் ஏனையவர்களும் சம்பவம் நடந்த இடத்தை விட்டு ஓடிவிட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது

இச்சம்பவம் தொடர்பாக தெகிவளைப் பொலிஸ் நிலையத்தில் திரு. லலித் அத்துலத் முதலி முறைப்பாடு செய்துள்ளார். [சு]

## 9 மாவீரர்களுக்கு

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

லெப்டினன்ட் கேர்ணல் ராஜன் உட்பட மற்றும் எட்டு வீரவேங்கைகளுக்கும் கடந்த இருநாட்களாக யாழ்ப்பாணக் குடாநாட்டில் பல பகுதிகளிலும் உள்ள மக்கள் தமது அஞ்சலியைச் செலுத்தினர்.

விசேடமாக அலங்கரிக்கப்பட்ட ஊர்தியில் கொண்டு வரப்பட்ட திருவப்படங்களுக்கு மக்கள் வமது வீட்டு வாசல்களில் தீபச்சுடர்களை ஏற்றியும் மலர்களைத் தூவியும் அஞ்சலி செலுத்தினர்.

## நள்ளிரவில்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கொண்டது

அரியாலை கிழக்கு, மணியம் தோட்டம், கொழும்புத்துறை பாஷையூர், குருநகர் கரையோரப் பகுதிக் குடியிருப்புகளில் கலிபர் சன்னங்கள் வீழ்ந்ததையடுத்து அப்பகுதி மக்கள் இரவோடுஇரவாக பாதுகாப்பான இடங்களை நோக்கிச் சென்றனர்.

மண்டைதீவு-பள்ளிமுனை முகாம்களிலிருந்து 'பரா' வெளிச்சக் குண்டுகளும் கடலோரப்பகுதியை நோக்கி ஏவப்பட்டன.

இதேவேளை நேற்று பகலும் பலாலியிலிருந்து அடிக்கடி வந்த ஹெலிகொப்டர் கடலோரப்பகுதியை நோக்கிப் படகுகளை வட்டமிட்டுச் சென்றது. (56)

# மரண அறிவித்தல்

## தம்பு கந்தசாமி

மட்டுவில் அம்மன் கோவிலடியை பிறப்பிடமாகக் கொண்டு கற்குளி, சாவகச்சேரியை வசிப்பிடமாகக் கொண்ட தம்பு கந்தசாமி அவர்கள் 29-08-92ல் காலமாகிவிட்டார். இவர் முத்துப்பிள்ளையின் அன்புக் கணவரும், கமலாம்பிகை, திருநாவுக்கரசு (பிராந்திய நிர்வாக அலுவலகம், தபாற்திணைக்களம், யாழ்ப்பாணம்), தம்பு (இளைப்பாறிய அஞ்சலதிபர்), சிவராசா (அஞ்சல் அலுவலகம், யாழ்ப்பாணம்), இராசதுரை ஆகியோரின் அன்புத் தந்தையுமாவார் இறுதிக் கிரியைகள் சாவகச்சேரியில் இன்று (1992-08-30) பிற்பகல் 1 மணியளவில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
பிள்ளைகள்

கற்குளி, சாவகச்சேரி. [சி-6755]

## திருமதி சுப்பிரமணியம் நேசரத்தினம்

காரைநகர், களபூமி, சத்திரந்தையைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் தற்போது சாவகச்சேரி கச்சாய் வீதியில் வசிப்பவருமாகிய திருமதி சுப்பிரமணியம் நேசரத்தினம் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சண்முகம் சுப்பிரமணியத்தின் (விக்னேஸ்வரா ஸ்ரோஸ், ஆலி-எல), அன்பு மனைவியும், செல்வரட்ணம், பரராசசிங்கம் இராசகுமாரன சாவகச்சேரி ஸ்ரீவிக்கினேஸ்வரா களஞ்சியம், சுந்தரலிங்கம் (ஆசிரியர், யாழ். இந்துக்கல்லூரி), கோமதி, ரவீந்திரகுமார் ஆகியோரின் அன்புத் தாயாரும் காலஞ்சென்ற விஞசித்தம்பி கந்தையா (இளைப்பாறிய புகையிரதநிலைய அதிபர், விஞசித்தம்பி வைத்திலிங்கம் (இளைப்பாறிய உதவி அரசாங்க அதிபர்) ஆறுமுகம் சரஸ்வதி, விஞசித்தம்பி தியாகராசா, இராசையா பூமணி, நடராசா வாலாம்பிகை, இராசையா சவுந்தராம்பிகை ஆகியோரின் அன்புச் சகோதரியும், புஸ்பவதி, தயாநிதி ஆகியோரின் அன்பு மாமியாரும் கஜரூபாவின் அன்பு பேத்தியுமாவார்.

அன்னாரின் ஈமைக்கிரியைகள் 30-8-92 ஞாயிற்றுக்கிழமை (இன்று) காலை 8 மணிக்கு சாவகச்சேரி இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் காலை10-00மணிக்கு கண்ணடிப்பிட்டி மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர்.

தகவல்:
சுப்பிரமணியம் செல்வரட்ணம்.
(மகன்)

விக்கினேஸ்வரா களஞ்சியம்,
சாவகச்சேரி. (சி-6756)


# பாடசாலை பஸ் சேவை

எம். ஆர். கே. எஸ். ஸ்தாபனத்தார் பாடசாலை மாணவர்களின் நலன்கருதி 01-09-92 முதல் சாவகச்சேரி, புத்தூர் சந்தியிலிருந்து யாழ். நகரிலுள்ள அனைத்து பாடசாலைகளுககுமான சேவையை ஆரம்பிக்கவிருக்கின்றார்கள்.

- ஒரே குடும்பத்திலிருந்து இரண்டுக்கு மேற்பட்ட மாணவர்கள் பிரயாணம் செய்தால் விசேட சலுகைகள்
- மாதாந்த கட்டண அடிப்படையில் சேவை நடைபெறும்.
- சென்று வருவதற்கான கட்டண விபரம்:-
  12 வயதிற்கு மேற்பட்டோருக்கு 25/-
  12 வயதிற்கு குறைந்தவர்களுக்கு 20/-

மேலதிக விபரங்களுக்கு தொடர்பு:-

**மினிபஸ் ஒன்றியம்**

பஸ் நிலையம், சாவகச்சேரி.

(எ-2401)


இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் தொனைத்தாரால் யாழ்ப்பாணம் இலன்கோவில் மேற்கு வீதி 83இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1992-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 30ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News paper at the General Post office Sri Lanka under Licence Number B/18336/1